**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**
************

**ஊடக அறிக்கை**

**இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்க**

**நிறைவேற்று சபையின் 65 ஆவது வருடாந்தபொதுக்கூட்டத்தில்**

**பிரதம விருந்தினராக பிரதி உயர் ஸ்தானிகர்**

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்க நிறைவேற்று சபையின் 65 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 2021 டிசம்பர் 11 ஆம் திகதி மொரட்டுவவில் நடைபெற்ற நிலையில், பிரதி உயர் ஸ்தானிகர் திரு.வினோத் கே ஜேக்கப் அவர்கள் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார். காந்தி அமைதிப் பரிசு வெற்றியாளரும் இலங்கையில் சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகருமான டாக்டர் ஏ.டி.ஆரியரத்ன அவர்கள் இங்கு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வின் போது இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்க தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன அவர்களும் உரையாற்றியிருந்தார்.

2. பிரதி உயர் ஸ்தானிகர் ஜேக்கப் அவர்கள் தனது உரையில், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சவால்களுக்கு பௌத்த மற்றும் காந்தியக் கொள்கைகளைப் பயன்படுத்துதல், கொவிட்19 ஆல் பாதிக்கப்பட்ட உலகளாவிய சமூகம் மற்றும் இந்திய சமூகத்தில் சர்வோதய தொடர்பு; இறுதியாக, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பரஸ்பரம் நன்மை தரும் உறவுகளின் தன்மை மற்றும் உள்ளீடு ஆகிய மூன்று சமகால விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார்.

3. “Cool The Globe” செயலி மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள தனித்துவமான 750 மெகாவாட் ரேவா சூரிய சக்தி ஆலை போன்ற இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குமான முன்னெடுப்புக்களின்

சமகால எடுத்துக்காட்டுக்கள் பலவற்றை இந்தியா தன்வசம் கொண்டுள்ளது. ஏறக்குறைய 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்திய-இலங்கை அபிவிருத்தி ஒத்துழைப்பை பொறுத்தவரை, உள்நாட்டில் கிடைக்கும் கட்டுமான மற்றும் பிற பொருட்களின் முக்கிய பயன்பாடு, பல்வேறு திட்டங்களில் (1990 சுவசெரிய அம்புலன்ஸ், இந்திய வீடமைப்புத் திட்டங்கள், மாதிரி கிராமம் போன்றவையும் ஏனைய மருத்துவமனை, பாடசாலை போன்ற திட்டங்கள்) மிகக்குறைவான காபன் தடத்தை உறுதி செய்வதுடன் பயன்படுத்தப்படும் கட்டுமான நடைமுறைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவையாகவும் உள்ளன.

4. இத்தகைய அணுகுமுறைகள் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் காலநிலை மாற்ற சவாலைச் சமாளிக்க முன்னெடுக்கப்படும் 'பஞ்சாமிர்தம்' அல்லது ஐந்து கூறுகள் பற்றிய கட்டமைப்புடன் ஒத்துப்போகின்றன. இக்கட்டமைப்பினுள் உள்வாங்கப்பட்டிருக்கும் ஐந்து திட்டங்களில் முதலாவதாக, இந்தியா தனது படிமமற்ற சக்தி திறனை 2030 க்குள் 500 ஜிகாவாட்டாக உயர்த்துதல்; இரண்டாவதாக, 2030 க்குள் இந்தியா தனது சக்தி தேவைகளில் 50 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க சக்திகளில் இருந்து பூர்த்தி செய்தல்; மூன்றாவதாக, இந்தியா இன்றையகாலப்பகுதி முதல் 2030 வரையான காலப்பகுதிக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை ஒரு பில்லியன் தொன்களாக குறைத்தல், நான்காவதாக 2030 க்குள் இந்தியா தனது பொருளாதாரத்தில் காபன் வெளியேற்றத்தின் தீவிரத்தை 45 சதவீதத்திற்கும் குறைவான அளவுக்குள் கட்டுப்படுத்துதல், அத்துடன் ஐந்தாவதாக 2070 ஆம் ஆண்டுக்குள், காபன் வெளியேற்றத்தில் இந்தியா நிகர பூஜ்ஜிய மட்டத்தை அடைதல் ஆகியவை காணப்படுகின்றன.

5. பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் அவர்கள் தனது உரையில், தொலைநோக்கு பார்வையுள்ள டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பில் அரச கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகளில் பிரதிபலிக்கப்பட்ட அனைவரின் நலன் மற்றும் அனைவரின்

மேம்பாட்டிற்கான கருத்துகளின் பொருத்தத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்டினார். இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் ‘ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்’ என்ற முக்கிய நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாளான 2021 டிசம்பர் 06ஆம் திகதி அன்று மகாபரிநிர்வாண திவாஸை நாடு தழுவிய அளவில் அனுசரிக்க இந்திய அரசு தீர்மானித்தது. மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் முக்கிய பிரதிநிதிகள், பாராளுமன்ற வளாகத்தில் பாபா சாகேப் அவர்களின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய அதேநேரம் தொடர்ந்து பௌத்த குருமாரால் தம்ம பூஜை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

**********

கொழும்பு

13 டிசம்பர் 2021